பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
15 07 2025 12 40
செவ்வாய்கிழமை பிற்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சீனா சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று அந்நாட்டு அதிபர் திரு. **Xi Jinping** -ஐ சந்தித்துப் பேச்சு நடத்தினார்

2. முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளாக இன்று மாநிலம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

3. திறன் இந்தியா இயக்கத்தின் 10 ஆவது ஆண்டு தினத்தையொட்டி நாடுமுழுவதும் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. அமெரிக்காவில் கல்வித்துறையில் ஆள்குறைப்பு செய்யும் அதிபர் டொனால்ட் டிரம்பின் முடிவுக்கு அந்நாட்டு உச்சநீதிமன்றம் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

5. 2028 ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது

*--- இனி விரிவான செய்திகள் ---*

சீனா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று அந்நாட்டு அதிபர் திரு. **Xi Jinping** -ஐ சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் இடை□ பெய்ஜிங்கில் இந்த சந்திப்பு நடைபெற்றதாக அவர் தமது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தி□ ா – சீனா இரு தரப்பு உறவில் ஏற்பட்டுள்ள சமீபத்தி□ முன்னேற்றங்கள் குறித்து திரு. **Xi Jinping** -□ிடம் தாம் எடுத்துரைத்ததாக அமைச்சர் கூறியுள்ளார்.

குடி□ ரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் திரு.நரேந்திர மோடி□ின் வாழ்த்துகளை அவரிடம் தெரிவித்ததாக டாக்டர் ஜெய்சங்கர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளாக இன்று மாநிலம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. காமராஜரின் பிறந்தநாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார். சுதந்திரத்திற்கு பிறகான நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பு ஈடு இணையற்றது என்றும், சமூக நீதி குறித்த அவரது உறுதிப்பாடு நம் அனைவருக்கும் மகத்தான ஊக்கத்தை வழங்குகிறது என்றும் பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, சென்னை காந்தி மண்டபம் வளாகத்தில் உள்ள காமராஜரின் திருவுருவப் படத்திற்கு தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

காமராஜரின் பிறந்தநாளையொட்டி, கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் அவருடைய உருவப் படத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தமிழகம் இன்று அடைந்திருக்கும் பல்வேறு வளர்ச்சிக்கு அடிகோலியவர் காமராஜர் என்றும் தனது இறுதிக்காலம் வரை மக்கள் நலனையே முதன்மையாக கொண்டு வாழ்ந்தவர் என்றும் கூறியுள்ளார்.

>><><><<

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் இந்தியா குறிப்பிடத்தக்க வளர்ச்சிக் கண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மும்பையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாநாட்டில் பங்கேற்று பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டார்.

சூரிய சக்தி, பேட்டரி உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன் தொழில்நுட்பம் போன்றவற்றில் சர்வதேச உற்பத்தி முனையமாக இந்தியா விளங்குவதாகவும், இதற்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் காரணம் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

>><><><<

கடந்த 11 ஆண்டுகளில் நாட்டின் சில்லரை பணவீக்கம் சராசரியாக 5 சதவீதமாக உள்ளது என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் சில்லரை பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்ததாகவும், அது தற்போது 5 புள்ளி ஒரு சதவீதமாக குறைப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>><><><<

5 ஆவது தேசிய புத்தொழில் விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக தொழில் மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை அறிவித்துள்ளது.

சுயசார்பு என்ற அரசின் லட்சியத்தையும் 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை எட்டும் வகையிலும் இந்தியாவின் புத்தொழில் நிறுவனங்கள் பல்வேறு வரி விலக்குகள் எளிதான கட்டுப்பாடுகள், நிதி ஆதரவு, திறன் மேம்பாடு போன்ற சலுகைகளை பெறும் வகையில் புத்தொழில் நிறுவனங்களுக்கு அரசு ஆதரவு அளித்து வருவதாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>><><><<

ஜப்பானை சேர்ந்த ஆடை உற்பத்தி நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் அந்நாட்டு தொழில் நிறுவன தலைமைச் செயல் அதிகாரிகளுடனான கூட்டத்தில் இன்று பங்கேற்று பேசிய திரு கிரிராஜ் சிங், ஜவுளித் துறையில் இந்தியா - ஜப்பான் இடையிலான வர்த்தக உறவு மேலும் வலுவடைய வாய்ப்புள்ளதாக நம்பிக்கை தெரிவித்தார்.

>><><><><<

உலக இளையோர் திறன்கள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் திறனை இளைய தலைமுறையினரிடம் ஊக்குவிக்கும் வகையில், இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் திறன்கள் மூலமாக இளையோருக்கு அதிகாரமளித்தல் என்பது இந்த ஆண்டுக்கான மையக் கருத்தாக உள்ளது.

திறன் இந்தியா இயக்கத்தின் 10 ஆவது ஆண்டுதினம் நாடுமுழுவதும் இன்று கொண்டாடப்படும் நிலையில், இந்த இயக்கத்தின்கீழ், வேலைவாய்ப்பு மற்றும் புத்தொழில் முயற்சிகளில் இளையோர் சிறந்து விளங்கும் வகையில் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>><><><><<

தமிழகம் முழுவதும் 196 இடங்களில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நடைபெறவுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் இத்திட்டத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். மாநில அரசின் சேவைகள் மக்களை தேடி செல்லும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாக திரு ஸ்டாலின் கூறினார்.

>><><><><<

பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த மாரத்தான் வீரர் பவுஜா சிங் சாலை விபத்தில் உயிரிழந்தார். அவருக்கு வயது 114.

ஜலந்தர் மாவட்டம் பீஸ் என்னும் கிராமத்தில் நேரிட்ட சாலை விபத்தில் அவர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பவுஜா சிங் மறைவு மிகுந்த வேதனை அளிப்பதாகவும், அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதில் இளையோருக்கு அவர் முன்மாதிரியாக உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>><><><<

அமெரிக்காவில் கல்வித்துறையில் ஆள்குறைப்பு செய்யும் அதிபர் டொனால்ட் டிரம்பின் முடிவுக்கு அந்நாட்டு உச்சநீதிமன்றம் ஒப்புதல் தெரிவித்துள்ளது. கடந்த மே மாதம் அந்நாட்டு கல்வித் துறையில் சுமார் ஆயிரத்து 400 பணியாளர்களை வேலையிலிருந்து நீக்கும் அரசின் முடிவை நிறுத்தி வைப்பதாக கீழமை நீதிமன்ற நீதிபதி திரு **Myong Joun** தெரிவித்திருந்தார். இந்நிலையில், உச்சநீதிமன்றம் அம்முடிவை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

>><><><<

ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களின் பல பகுதிகளில் இன்று அதி கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. அடுத்த 2 நாட்களுக்கு இந்த நிலை நீடிக்கும் என்று தெரிவித்துள்ள வானிலை மையம், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்கத்திலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதனிடையே ராஜஸ்தானில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தானின் 10 மாவட்டங்களுக்கு கனமழை பெய்யும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இமாச்சலப்பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். சிம்லா, சோலன், சிர்மார் மாவட்டங்களில் இன்று கன முதல் மிக கனமழைக்கான வாய்ப்புள்ளதாகவும், பிலாஸ்பூர், குல்லு, மண்டி மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>><><><<

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தின் மலை ரயில் யுனெஸ்கோ பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அந்த ரயிலில் பயணிப்பது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று சுற்றுலா பயணி ஒருவர் தெரிவித்தார்.

>><><><<

உலகின் மிகப்பெரிய இளைஞர் அமைப்பான என்சிசி எனப்படும் தேசிய மாணவர் படையின் 77 ஆவது நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது. நாட்டின் இளைஞர்களிடையே நற்பண்புகளையும், தோழமை உணர்வையும், தலைமைத்துவ திறனையும், சேவை புரியும் ஆற்றலையும் மேம்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, மாணவர்களுக்கு நல் ஒழுக்கத்தையும் ஆயுதப் பயிற்சியையும் வழங்கி வருகிறது.

>><><><<

ஜம்மு கஷ்மீரின் தோடா அருகே நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 12 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தோடா பாரத் சாலையில் சென்ற டெம்போ வாகனம் ஆழமான பள்ளத்தில் கவிழ்ந்து, இந்த விபத்து நேரிட்டதாகவும் மீட்புப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

2028 ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 2028 ஜூலை 15 ஆம் தேதி வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கும் இப்போட்டி ஜூலை 30 ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட், கூடைப்பந்து, கால்பந்து, ஹாக்கி போன்ற போட்டிகள் ஜூலை 12 ஆம் தேதியே தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>End of News<<**